# சிவராத்திரியின் சிறப்பு 6

சிவபெருமானை நினைந்து அனுட்டிக்கும் விரதமே சிவராத்திரி விரதமாகும்.

இவ்வுலகில் ஜன்மம் எடுத்த ஒவ்வொரு மானிடரும் இறுதியில் இறைவனை அடைந்து நித்தியானந்த வாழ்வைப் பெறவேண்டும் என்பதே சைவ சமயத்தின் கோட்பாட்டில் ஒன்றாகும்.

இறைவனை அடைவதற்கு, சைவ சமயம் நான்கு முறைகளை வகுத்து அமைத்துள்ளது. அவையாவன:- சரியை, கிரியை, யோகம், ஞானம் எனப்படும். இவற்றில் ஒவ்வொருவரும் தன் தன் ஆற்றலுக்கு ஏற்றபடியான முறையைத் தெரிவு செய்யலாம்.

சரியையானது – தேவாலயத் தொண்டுகளும், விரதங்களும் ஆகும். இது பெரும் பாலானோரால் அனுட்டிக்கக் கூடியது. ஏனைய முறைகள் எல்லோராலும் அனுட்டிப்பது கடினம். இந்த நான்கு முறைகளாலும் பெறக்கூடியது முத்தியாகும். இது போன்று மானிடராய்ப் பிறந்தோரை இறைவனிடம் சேர்க்கும் ஒழுங்கு முறை சைவ சமயத்தைத் தவிர வேறெந்தச் சமய வழிபாடுகளிலும் இல்லை.

சரியை முறையைப் பின்பற்றி விரதங்கள் அனுட்டிப்போர் சிவராத்திரி விரதத்தை மிகவும் பேணிப் போற்றுகிறார்கள். இந்தச் சிவராத்திரி விரதத்தின் தத்துவம் என்ன? விஞ்ஞானிகளின் கூற்றின்படி, சூரியன் ஒரு நெருப்புக் கோளம். அது வெப்ப மிகுதியால் வெடித்துப் பல துண்டுகளாகச் சிதறியது. அவ்வாறான சிதறல்களே, பூமி, செவ்வாய், புதன், வியாழன், சுக்கிரன், சனி, யூரேனஸ், நெப்டியூன், புளூட்டோ என்னும் கிரகங்களும் மற்றும் நட்சத்திரங்களுமாகும். கிரகங்கள் ஒவ்வொன்றும் தன்னைத்தானே சுற்றுவதுடன் சூரியனையும் சுற்றி வருகின்றன. இவை, சூரியனுடைய ஈர்ப்புத் தன்மையால் ஒரே குடும்பமாக இயங்குகின்றன. ஆதியில், பூமி நெருப்புக் கோளமாக இருந்தது. இரசாயன மாற்றங்களால், தற்போதைய நிலையை அடைந்தது. இவை எல்லாவற்றிற்கும் ஒரு அடிப்படைச் சக்தி ஒன்றுண்டு. இந்தச் சக்தியையே, சைவ சமயமானது இறைவனாகக் கருதுகிறது.

இவ்வாறான அடிப்படையிலேயே பிரம்மா, விஷ்ணு, சிவன், சக்தி ஆகிய தெய்வங்களைச் சைவ சமயம் உலக மக்களுக்கு அறிமுகம் செய்கின்றது.

இப்படிப்பட்ட தத்துவங்களோடு இணைந்ததுதான் சிவராத்திரியின் மாண்பு. சூரிய, சந்திரர்களின் ஈர்ப்பு விசையினால் பூமியில் பஞ்ச பூதங்கள் கூடுதலாகத் தாக்கமடையும் நாளிரவே சிவராத்திரியாகும். இவ் இரவு விரதம் அனுட்டிப் பவர்களுக்கு இறைவனருள் கிடைக்கும் என வேதங்கள் கூறுகின்றன.

சைவ சித்தாந்தத்தின்படி பிரம்மாவுக்கும் விஷ்ணுவுக்கும் இடையில் போர் மூண்டபோது, சிவபெருமான் இருவருக்கும் இடையில் அக்கினி மலையாகத் தோன்றினார். போட்டியில் வெற்றி பெறுவதற்காக அக்கினி மலையின் அடி, முடி தேடி இருவரும் தோல்வி அடைந்தனர். அப்பொழுது அக்கினி மலை தணிந்து சிவபெருமான் தோன்றி இருவரையும் சமாதானம் செய்து, பிரம்மனுக்குப்

படைக்கும் தொழிலையும் விஷ்ணுவுக்குக் காக்கும் தொழிலையும் கொடுத்தார். அடி, முடி இல்லாத சிவனின் சொரூபமே சிவனைச் சித்தரிக்கும் லிங்க ரூபமாகும். இது உருவாகின நாளே சிவராத்திரி எனப்படும்.

இந்தியாவில், திருவெண்ணாமலையில் சிவபெருமான் தேயலிங்கமாக - அதாவது அக்கினி லிங்கமாகக் காட்சி தருகிறார். சிவராத்திரி விரத மகிமையைச் சிவபெருமான் ஆதி தேவருக்கு ஆதியில் கூறினார்.

ஒவ்வொரு ஆண்டும் மாசி மாதத்து அபரபக்கச் சதுர்த்தியில் வரும் இரவு சிவராத்திரி தினமாகும். அன்று காலையில் ஸ்நானம் செய்து, சுத்தமான ஆடை அணிந்து, கோயிலுக்குச் சென்று இறைவனை வணங்கியபின் விரதத்தை ஆரம்பிக்க வேண்டும். ஆலயத்திலோ அல்லது வீட்டில் சுவாமி அறையிலோ சிவனுக்கு ஆவாகனம் பண்ணி, கும்பம் நிறுவி, பிரசாதம் படைத்து, தூபதீபங்கள் காட்டி சிவனை வணங்க வேண்டும். கடவுள் பாடல்கள் தனியாகவோ, கூட்டாகவோ பாடிக் கும்பிடுதல் வேண்டும்.

சாந்தம், பொறுமை, அன்பு பொருந்திய நிலையில் பிரார்த்திக்க வேண்டும். சிவராத்திரியை அனுட்டிப்போர் உணவு உண்ணாமல், நித்திரை செய்யாமல் இரவெல்லாம் சிவனைப் பிரார்த்திக்க வேண்டும். ஒவ்வொரு சாமத்திற்கும் சிவனுக்குப் பூசை செய்ய வேண்டும்.

நடுச்சாமம் 12.00 மணிக்கு "லிங்கோற்பவம்" - அதாவது, சிவன் பிரம்மாவிற்கும், விஷ்ணுவிற்கும் லிங்க வடிவில் காட்சி கொடுத்த நேரம். அந்த நேரத்தில் சிவபெருமானை வணங்குவதே கூடிய புண்ணியம் எனப் புராணங்கள் கூறுகின்றன. நான்கு சாமமும் வணங்கிய பின் அடுத்த நாள் காலையில் ஸ்நானம் செய்து இறைவனை வணங்கியபின் உணவு உட்கொள்ளுவர். உபவாசம் இருக்க முடியாதோர் பால் அருந்தலாம். அல்லது ஒரு நேரம் மாத்திரம் உணவு உட்கொள்ளலாம். நித்திரை விழிக்க முடியாதோர், 'லிங்கோற்பவம்' வரை விழித்திருந்து பின்னர் உறங்கலாம்.

ஒவ்வொரு வருடமும் சிவராத்திரி விரதம் அனுட்டிப்போர் ஜீவன் முத்தி அடைவர் என வேத ஆகமங்கள் கூறுகின்றன. இதுவே சிவராத்திரியின் தனிச் சிறப்பு.

நன்றி!

வணக்கம்!